සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

පාලි I
பாளி I
Pali I

74 STE I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பாளி மொழியின் நெடுங்கணக்கு பற்றிய சரியான கூற்று யாது?
(1) பாளி நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை பற்றிக் கருத்து வேறுபாடுகள் இல்லை.
(2) பாளி நெடுங்கணக்கு ஸ, ஞ ஆகிய எழுத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.
(3) பாளியில் மொழி இறுதி எழுத்துக்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும்.
(4) இணைந்த எழுத்து ஒன்றுக்கு முன்னாலுள்ள எ, ஒ என்பன நீட்டி உச்சரிக்கப்படும்.

**2.** ஒத்தகருத்துச் சொற்களைக் கொண்ட சோடியைத் தெரிவுசெய்க.
(1) antevāsiko - saddhivihāriko
(2) uklāpaṃ - kacavaraṃ
(3) sayaṃ - sāyaṃ
(4) ramati - viramati

**3.** விதிக்கப்பட்ட பாடநூல்களுக்கமைய '**Maṇḍalārāma**' என்பதனால் பின்வரும் எந்த விகாரை கருதப்படுகிறது?
(1) அபயகிரி
(2) இசுறுமுனிய
(3) வட்டாரம
(4) சேதியகிரி

**4.** முதலாவது பௌத்த பேரவையில் சங்யுக்த, அங்குத்தர நிக்காயாக்களை நடத்திச் செல்வதற்கு பொறுப்பளிக்கப்பட்ட மஹா அரகதர்களின் பெயர்களை முறையே கொண்ட தெரிவு யாது?
(1) அநுருத்த, சாரிபுத்த
(2) ஆனந்த, மஹாகஸ்ஸப்ப
(3) சாரிபுத்த, ஆனந்த
(4) மஹாகஸ்ஸப்ப, அநுருத்த

**5.** இவற்றுள் சித்தார்த்த போதிசத்துவரின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் சூத்திரம் எது?
(1) Ariyapariyesana
(2) Alagaddūpama
(3) Aggañña
(4) Ambaṭṭha

**6.** பின்வருவோருள் '**sakāya nirutti**' என்பதனால் கருதப்படுவது பாளி மொழி எனக் குறிப்பிட்டவர் யார்?
(1) யமலு, தெகுல ஆகிய பிக்குமார் இருவர்
(2) உரையாசிரியரான புத்தகோச பிக்கு
(3) பொல்வத்தை புத்ததத்த பிக்கு
(4) பேராசிரியர் ரீஸ் டேவிட்ஸ்

**7.** **கேசபுத்திய காலாம சூத்திரம்** உரித்தாவது அங்குத்தர நிக்காயவின்,
(1) Tika nipāta இற்காகும்.
(2) Pañcaka nipāta இற்காகும்.
(3) Aṭṭhaka nipāta இற்காகும்.
(4) Dasaka nipāta இற்காகும்.

**8.** தீபவம்சம் பற்றிய சரியான கூற்று யாது?
(1) பஜ்ஜபதோரு வம்சம் என்பது அதன் இன்னொரு பெயராகும்.
(2) இது 36 அத்தியாயங்களைக் கொண்டது.
(3) இது குத்தக நிக்காயவில் உள்ளடங்கிய நூலாகும்.
(4) உபதிஸ்ஸ எனும் பிக்குவினால் எழுதப்பட்டதாகும்.

**9.** "**nonītasukumālaṃ mam jātapallavakomalaṃ**" என்ற வாக்கியத்திலுள்ள '**nonīta**' என்பதன் பொருள் யாது?
(1) அடக்கப்படாத (2) உன்னத
(3) தாமரை (4) வெண்ணெய்

● பின்வரும் காதாக்களை வாசித்து **10** தொடக்கம் **13** வரையில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

Evaṃ tenānusiṭṭho'haṃ - nāyakena hitesinā,
Gijjhakūṭaṃ samāruyha - jhāyāmi girikandare.

Ṭhito pabbatapādamhi - mamāha so mahāmuni,
Vakkalī'ti Jino vācaṃ - taṃ sutvā mudito ahaṃ.

Pakkhandiṃ selapabbāre - anekasataporise,
Tadā Buddhānubhāvena – sukhena'va mahiṃ gato.

**10.** Kattha ṭhito Bhagavā Vakkalī'ti āmantesi?
(1) girikandare (2) pabbatapādamhi
(3) Gijjhakūṭe (4) anekasataporisamajjhe

**11.** Kathaṃ so selapabbhārā mahiṃ gato?
(1) ākāsena (2) jhānabalena
(3) padasā (4) dasabalānubhāvena

**12.** மேலே தரப்பட்ட முதலாவது காதாவின் மிகச் சரியான கருத்தைத் தரும் தெரிவு யாது?
(1) Hitesinā tena nāyakena evaṃ anusiṭṭho ahaṃ Gijjhakūṭaṃ samāruyha girikandare jhāyāmi.
(2) Gijjhakūṭaṃ samāruyha hitesinā tena nāyakena evaṃ anusiṭṭho ahaṃ girikandare jhāyāmi.
(3) Evaṃ anusiṭṭho ahaṃ Gijjhakūṭaṃ samāruyha girikandare hitesinā tena nāyakena jhāyāmi
(4) Ahaṃ hitesinā tena nāyakena Gijjhakūṭaṃ samāruyha girikandare anusiṭṭho evaṃ jhāyāmi

**13.** மேலே தரப்பட்ட காதாவுக்கமைய, வக்கலி தேரர் கிரிகந்துரவுக்கு ஏறி என்ன செய்தார்?
(1) தற்கொலை செய்ய நினைத்தார்.
(2) தியானம் செய்தார்.
(3) புத்தரின் ரூமத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.
(4) புத்தரின் போதனைகளைச் செவிமடுத்தார்.

**14.** சுல்லவக்கபாளியில் உள்ள கந்தக்கக்களின் எண்ணிக்கை யாது?
(1) பத்து (2) பதினொன்று
(3) பன்னிரண்டு (4) பதின்மூன்று

**15.** '**nivāsana**', '**saṅghāṭi**' ஆகிய சொற்களின் கருத்துக்கள் முறையே
(1) உள் அங்கி, இரட்டை அங்கி (2) இருக்கை, உள் அங்கி
(3) இரட்டை அங்கி, தனி அங்கி (4) இரட்டை அங்கி, உள் அங்கி

**16.** 'அம்ஹ' ஒலியின் **ஜட்டி (Genitive)** வேற்றுமை ஒருமை உருபுகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) mayhaṃ, me, amhākaṃ, mamaṃ (2) amhaṃ, amhākaṃ, me, no
(3) mama, mayhaṃ, mamaṃ, me (4) mayhaṃ, amhākaṃ, vo, no

**17.** **'Itarā pajā'** என்பதனால் கருதப்படுவது
(1) ஏனைய மனிதர்கள்
(2) பண்டைய மக்கள்
(3) கடந்து வந்த மனிதர்கள்
(4) அந்தப் பெயருடைய மக்கள்

**18.** சுல்லவக்கபாளியின் வத்தக் கண்டகயிற்கு அமைய கோடைக் காலத்தில் ஜன்னல்களை,
(1) பகல், இரவு ஆகிய இரண்டு வேளைகளிலும் திறந்து வைத்தல் வேண்டும்.
(2) பகல், இரவு ஆகிய இரண்டு வேளைகளிலும் மூடி வைத்தல் வேண்டும்.
(3) பகலில் திறந்து வைத்து, இரவில் மூடி வைத்தல் வேண்டும்.
(4) பகலில் மூடி வைத்து, இரவில் திறந்து வைத்தல் வேண்டும்.

**19.** **'bhogā sannicayaṃ yanti, vammiko'vupacīyati'** என்பதில் அடங்கியுள்ள கவிதைநயம் யாது?
(1) வழியெதுகை
(2) உவமைகள்
(3) உருவகம்
(4) இயற்கை வர்ணனை

**20.** பெயரடைக் கலவை (கம்மதாரய), தப்புரிச, கலப்புப் பெயர்கள் (த்வந்த சமாச) ஆகிய சொற்களை ஒழுங்கு முறையில் கொண்ட தெரிவு யாது?
(1) anākulaṃ, mahāmegho, timaṇḍala
(2) kāyakammaṃ, mahāmatī, pādamūle
(3) uṇhakālo, ariyasāvako, mittāmaccā
(4) gahapatiputto, pattacīvaraṃ, guṇasāgaro

**21.** நண்பனின் வீழ்ச்சியில் மகிழ்வுறாது, முன்னேற்றத்தில் மகிழ்ச்சியடையும் சிறந்த நண்பரைக் குறிப்பிடும் தெரிவு யாது?
(1) atthakkhāyī
(2) ānukampaka
(3) upakāra
(4) samānasukhadukkha

**22.** மகாவம்சத்தில் விதிக்கப்பட்ட பகுதிக்கமைய பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு சரியான கூற்றுகளின் சோடிகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
A. மன்னன் மூத்தசிவனின் இரண்டாவது மகனின் பெயர் தேவநம்பியதீசன் ஆகும்.
B. அமைச்சர் மகா அரிட்ட தேவநம்பியதீசனின் மாமனார் ஆவார்.
C. தர்மாசோக மன்னன் அமைச்சர் அரிட்டவுக்கு தளபதிப் பதவியொன்றை வழங்கினார்.
D. மன்னன் தேவநம்பியதீசன் பொசொன் பௌர்ணமி தினமொன்றிலேயே இரண்டாவது முறையாக முடிசூடப்பட்டான்.
(1) A, C
(2) A, D
(3) B, C
(4) B, D

**23.** இறந்தகால அறிகுறி **(அஜ்ஜதனீ)**, கட்டாயமான **(பஞ்சமீ)**, விருப்பமான **(சத்தமீ)** ஆகிய வினைச்சொற்கள் ஒழுங்குமுறையில் தரப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) pāhesi, ādāya, dhāveyya
(2) jānāmi, uṭṭhāya, dadeyyuṃ
(3) agacchi, vadantu, bhaje
(4) ovadi, bhavatu, pasādāya

**24.** **'ratanānīdisānettha'** என்பதன் சரியான பிரிப்பு முறையைத் தெரிவு செய்க.
(1) ratanāni + īdisāni + ettha
(2) ratanāni + edisāni + ettha
(3) ratanā + na + īdisāni + ettha
(4) ratanā + edisā + na + ettha

**25.** **'mā cintayi mahārāja'** என்பதன் சரியான கருத்து யாது?
(1) பேரரசரே, நான் இது பற்றிச் சிந்தித்தேன்.
(2) பேரரசரே, என்னைப் பற்றிச் சிந்திக்காதீர்கள்.
(3) பேரரசரே, சிந்திக்காதிருப்பது நல்லது.
(4) பேரரசரே, இதைச் சிந்திக்காதிருக்க வேண்டாம்.

**26.** நிபாத சொற்களை **மாத்திரம்** கொண்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) evaṃ, tādisaṃ, yathā
(2) iva, sabbattha, yesaṃ
(3) sadā, sammā, tumhe
(4) yadā, sace, loke

**27.** **'Devo na sammā vassissati'** என்பதன் சரியான கருத்து யாது?
(1) கடவுள் சௌகரியமாக வாழ்வது இல்லை.
(2) கடவுள் நன்றாக மழை பெய்விக்கவில்லை.
(3) மழைக்காலத்தில் கடவுள் சௌகரியமாக வாழ்வது இல்லை.
(4) மழை நன்றாகப் பெய்வதில்லை.

**28.** **'catasā'** என்ற சொல் பற்றிய சரியான கூற்று யாது?
(1) சேத்த ஒலியில் தத்தியா ஒருமையாகும்.
(2) சேத்த ஒலியில் பஞ்சமீ பன்மையாகும்.
(3) சேத்தஸ் ஒலியில் சதுத்தி ஒருமையாகும்.
(4) சேத்தஸ் ஒலியில் பதமா பன்மையாகும்.

**29.** மகாசுப்பின ஜாதகக் கதைக்கமைய **'viparivattanakāle'** என்பதனை விவரிப்பதற்குப் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.
(1) akāraṇassa kāraṇanti gahaṇakāle.
(2) kāraṇassa akāraṇanti chaḍḍanakāle.
(3) abhūtassa bhūtanti gahaṇakāle.
(4) lajjīnaṃ ussannakāle.

**30.** மல்லிகாதேவி தொடர்பான சரியான கூற்று யாது?
(1) புத்தருக்கு 'மேல' அணிகலனை காணிக்கையாகக் கொடுத்த பெண்ணாவார்.
(2) வாழ்க்கையில் எதுவித தவறும் செய்யாத பெண்ணாவார்.
(3) வாழ்க்கை பற்றிய ஞானம் கொண்ட புத்தரால் போற்றப்பட்ட பெண்ணாவார்.
(4) பிம்பிசார மன்னனின் பட்டத்து இராணி ஆவார்.

**31.** **'Aggabrāhmaṇo'** என்பது,
(1) சந்தியாகும்.
(2) சமாசமாகும்.
(3) தத்திதவாகும்.
(4) கிதகயாகும்.

**32.** **'kaṇhaṃ dhammaṃ vippahāya, ....... bhāvetha paṇḍito'** என்பதிலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.
(1) asataṃ
(2) cittaṃ
(3) dhammaṃ
(4) sukkaṃ

**33.** பதினாறு மகா கனவுகளுக்கு **உரித்தல்லாத** கனவைக் கொண்ட தெரிவு யாது?
(1) அரசமாளிகையின் நுழைவாயிலில் தங்கம் நிரம்பிய குடங்களோடு அமைச்சர்கள் இருப்பதைக் கண்டமை
(2) பெரிய கல்வீடுகளைப் போன்ற பெரும்பாறை கப்பலைப்போன்று மிதந்து கொண்டிருப்பதனைக் கண்டமை
(3) இருபக்கமும் வாயைக் கொண்ட குதிரையொன்று இரு வாய்களாலும் புல்லைச் சாப்பிடுவதனைக் கண்டமை
(4) ஒரு லட்சம் பெறுமதியான சந்தனக் கட்டையை பழுதடைந்த மீனின் விலைக்கு விற்பதைக் கண்டமை

**34.** தச்சனைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பாளிச் சொல் யாது?
(1) usukārā
(2) tacchakā
(3) tasāvakā
(4) nettikā

**35.** 'அ(ப்)பதானபாளி' பற்றிய **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) சுயசரிதைகளைக் கொண்ட திரிபிடக நூலாகும்.
(2) குத்தக நிகாயாவின் பதினோராவது நூலாகும்.
(3) தேராபதான, தேரீ அபதான என இரண்டு பகுதிகளைக் கொண்டது.
(4) புத்தாபதானவும் பச்சேகபுத்தாபதானவும் இதில் உள்ளடங்கியுள்ளன.

**36.** காரண காரியத் தொடர்பு பெருமளவில் விவரிக்கப்படும் அபிதர்ம நூல் இவற்றுள் எது?
(1) Dhammasaṃgaṇippakaraṇa
(2) Vibhaṃgappakaraṇa
(3) Puggalapaññattippakaraṇa
(4) Paṭṭhānappakaraṇa

**37.** **சங்காதிசேச** ஒழுக்கக் கோட்பாடொன்றை மீறுவதிலிருந்து தூய்மையடையத்தக்க ஒழுக்க நடவடிக்கை அடங்கிய தெரிவு யாது?
(1) Abbhāna (2) Parivāsa (3) Mānatta (4) Mūlāyapaṭikassana

**38.** பின்வருவோருள் பாளி மகாபோதிவம்சத்தின் ஆசிரியர் யார்?
(1) வில்கம்முல தேரர் (2) உபதிஸ்ஸ தேரர்
(3) வாசிஸ்ஸர தேரர் (4) வேதேஹ தேரர்

**39.** எதிர்ச்சொற்களைக் கொண்ட தெரிவு யாது?
(1) ākāsaṃ - okāsaṃ (2) ākulaṃ - samākulaṃ
(3) okaṃ - anokaṃ (4) gāraṃ - agāraṃ

**40.** **'asabbhā ca nivāraye'** என்பதிலுள்ள **'nivāraye'** என்பது,
(1) நிகழ்கால, முன்னிலை, ஒருமைச் சொல்லாகும்.
(2) பஞ்சமீ, தன்மை, பன்மைச் சொல்லாகும்.
(3) சத்தமீ, படர்க்கை, ஒருமைச் சொல்லாகும்.
(4) காலாதிபத்தி, முன்னிலை, ஒருமைச் சொல்லாகும்.

**41.** பின்வருவனவற்றுள் பொருத்தமான செய்யுள் வரிகளைக் கொண்ட தெரிவு யாது?
A - paṇḍito sīlasampanno
B - nivātavutti atthaddho
C - bhogā sannicayaṃ yanti
D - bhamarasseva irīyato
E - tādiso labhate yasaṃ
F - jalaṃ aggīva bhāsati

(1) A யும் D யும் (2) B யும் E யும் (3) B யும் F யும் (4) C யும் E யும்

**42.** பின்வரும் எந்தக் காரணத்தினால் மாணவன் நன்றாகக் கற்கின்றமை ஆசிரியருக்குச் செய்யும் உயர் மதிப்பாக அமையும்?
(1) ஆசிரியர் மாணவர் தொடர்பு வலுவடைவதனாலாகும்.
(2) மாணவனால் தனது கடமைகள் நிறைவேற்றப்படுவதனாலாகும்.
(3) மாணவர் நற்குணங்களைக் கொண்டவராகக் காணப்படுவதனாலாகும்.
(4) மாணவர் ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவதனாலாகும்.

**43.** மூன்றாவது பௌத்த பேரவைக்குச் செலவான காலம்
(1) மூன்று மாதங்களாகும். (2) நான்கு மாதங்களாகும்.
(3) ஏழு மாதங்களாகும். (4) ஒன்பது மாதங்களாகும்.

**44.** திரிவித்யாவை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது?
(1) pubbenivāsānussati, cutūpapāta, āsavakkhaya
(2) iddhividha, dibbasota, paracittavijānana
(3) sutamayapaññā, cintāmayapaññā, bhāvanāmayapaññā
(4) ñātapariññā, tīraṇapariññā, pahānapariññā

**45.** பாளி வம்சக்கதையின் (வங்சகதா) பிரதான பண்பைக் **கொண்டிராத** தெரிவு யாது?
(1) புத்தருடைய வரலாற்றுடன் தொடர்புடைய பொருளை அல்லது சம்பவத்தைக் கொண்டிருத்தல்
(2) வரலாற்று முக்கியத்துவத்தின் தொடர்ச்சியான பரம்பரைக் கதையொன்றை எடுத்துக்காட்டுதல்
(3) அரசர்கள் சாசனத்துக்குச் செய்த சேவைகளை மட்டும் எடுத்துக்காட்டுதல்
(4) தர்ம ரசனை, கருத்து ரசனை, பக்தி உணர்திறன் ஆகியவற்றை உருவாக்குதல்

**46.** **'timaṇḍalaṃ paṭicchādentena...'** என்பதிலுள்ள **'timaṇḍala'** அல்லது மூன்று மண்டலங்கள் என்றால் என்ன?
(1) தொப்புள், கணைக்கால் தசை, கணுக்கால்
(2) தொப்புள், இரு முழங்கால்கள்
(3) தொப்புள், தோள்கள்
(4) மார்பு, தொப்புள், கணைக்கால் தசை

**47.** 'தலையணை' என்பதற்குப் பயன்படுத்தப்படும் பாளிச் சொல்லைத் தெரிவு செய்க.

(1) mañcapaṭipādakaṃ (2) bhummattharaṇaṃ
(3) paccattharaṇaṃ (4) bimbohanaṃ.

**48.** ஆரோக்கியமான சமூகத் தொடர்புகளைப் பேணுவதற்குத் தேவையான முக்கிய காரணியாவது

(1) சமயம் சார்ந்த தொடர்புகளை முதன்மையானதாகக் கருதிச் செயற்படல்
(2) ஏனையோரின் செயற்பாடுகளைத் தானே செய்தல்
(3) மதிக்கப்பட வேண்டியவர்களை மாத்திரம் மதித்தல்
(4) தனது வகிபாகத்தை இனங்கண்டு கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

**49.** இலக்கணரீதியாகச் சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) Mama aṭṭhannaṃ bhātarānaṃ catuttho dukkhaṃ vasati.
(2) Ayaṃ pañcadārakā abhiṇhaṃ magge kīḷanti.
(3) Bhagavā paṭhamaṃ vasse Bārāṇasiyaṃ Isipatane vihari'
(4) Tasmiṃ vane bahavo uccā rukkhā hoti.

**50.** **'Ekaṃ māretvā ekassa sotthikammassa karaṇaṃ nāma natthi'** என்ற தொடருக்கு மிகப் பொருத்தமான கருத்தைத் தரும் தெரிவு யாது?

(1) ஒருவர் இறந்த பின்னர் இன்னொருவருக்கு உதவி செய்வதால் பயனேதுமில்லை.
(2) ஒருவர் இறந்து இன்னொருவரின் நன்மைக்காகப் பணியாற்றுவதில் பயனேதுமில்லை.
(3) ஒருவனைக் கொன்று இன்னொருவனுக்கு நன்மை செய்தல் என்ற ஒன்று இல்லை.
(4) ஒருவனைக் கொன்று இன்னொருவனை வாழவைப்பதற்கு எதுவித காரணமும் இல்லை.

* * *